[2020 செப்டம்பர் 16

17—

விதை சுத்திகரிப்பு நிலையம்

***40865—திருமதி பெ. சீத்தாபதி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதியில் நவீன வேளாண் பண்ணை மற்றும் விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா அவர்களின் வழியில் வந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழியில் வந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அவர்களுடைய வழியில் இன்றைக்கு நல்லாட்சி நடத்திவரும் குடிமராமத்து நாயகன், நல்லாட்சி நாயகன் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், அவருக்கு தோளோடு தோள் சேர்த்து நின்று துணை புரிந்து நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய முதல் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதியில் நவீன வேளாண் பண்ணை மற்றும் விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.*

முற்பகல் 10–55

திருமதி பெ. சீத்தாபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்று, மூன்றாம் ஆண்டில் அடியெடுத்து வைத்து,*

2020 செப்டம்பர் 16]

முத்தான திட்டங்கள் பல தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களை வழிநடத்தும் கழகத் தலைவர், அண்ணன் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். எங்கள் கழகத்தின் புதிய பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம் தமிழர்களின் முதுகெலும்பு. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட மரக்காணம் பேரூராட்சி, மரக்காணம் கிழக்கு ஒன்றியம், மேற்கு ஒன்றியம், ஒலக்கூர் கிழக்கு ஒன்றியம் ஆகிய பகுதிகளில் வாழும் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை, விதைகளை நாமே பயன்படுத்த வேண்டும். அவ்வாறு பயன்படுத்துவதற்கு, விதை நேர்த்தி செய்வதற்குண்டான கட்டடங்கள் வேண்டுமென்றும், நவீன வேளாண் பண்ணை அமைக்க வேண்டுமென்றும் நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால், அதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், இப்போது நாம் என்ன செய்கிறோம் என்றால், வெளிநாட்டிலிருந்து விவசாயத்திற்குத் தேவையான விதையை வாங்குகிறோம். ஏன், நாம் உற்பத்தி செய்யக்கூடிய விதையை நாமே பயன்படுத்திக்கொள்ளலாமே? அதனால்தான் அந்த நவீன வேளாண் பண்ணையையும், விதை நேர்த்தி செய்யக்கூடிய சுத்திகரிப்பு நிலையத்தையும் அமைக்க தாங்கள் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய பகுதியில் அதிக நெல் உற்பத்தியாகின்றது என்றும், விவசாயத்திற்குத் தேவையான விதை நெல்லை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கிறோம் என்றும் தெரிவித்தார். தமிழகத்திலுள்ள விவசாயிகளுக்குத் தேவையான அளவிற்கு விதைகளை தமிழக வேளாண்மைத் துறை வழங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை முதலில் அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், விழுப்புரம் மாவட்டத்தில் விவசாயிகளுக்குத் தேவையான தரமான சான்று விதைகளை உற்பத்தி செய்வதற்காக

வானூர், கா. குப்பம், இருவேல்பட்டு மற்றும் வடக்கனந்தல் ஆகிய இடங்களில் அரசு விதைப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. இப்பண்ணைகளில் ஆதார விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 21 வட்டாரங்களுக்குப் பிரித்தளிக்கப்பட்டு, விவசாயிகளின் வயல்களில் விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு, விதைகள் போதுமான அளவில் கொள்முதல் செய்யப்பட்டு, சுத்திகரிப்பு செய்யப்பட்டு, விதை பகுப்பாய்விற்குப் பின்பு சான்று அட்டை பொருத்தப்பட்டு, தரமான சான்று பெற்ற விதைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், 'சக்தி விதைகள்' நிறுவனத்திற்குச் சொந்தமான தனியார் விதை சுத்திகரிப்பு நிலையத்திலும், சுத்திகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திண்டிவனம் தொகுதியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் உள்ள எண்ணெய்வித்து ஆராய்ச்சி நிலையப் பண்ணையில் புதிய எண்ணெய்வித்து இரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. வானூர் அரசு விதைப் பண்ணை திண்டிவனம் தொகுதியிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் இயங்கி வருவதால், திண்டிவனம் தொகுதியின் விவசாயிகளுக்குத் தேவையான ஆதார விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன.

அதோடு, தமிழகத்தில் 41 அரசு விதைப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. ஆண்டுதோறும் பயிர்வாரியாக சான்று விதை, தேவை விதைப் பெருக்கம் மற்றும் விதை சதவிகிதம் தேவையான அளவிற்கு அங்கே கிடைக்கின்றன. வேளாண் துறை மறுபரிசீலனைக்குப் பின்னர், வட்டார உதவி வேளாண்மை இயக்குநர் மேற்பார்வையில் அரசு விதைப் பண்ணைகள் இயங்கி வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மரக்காணம் பகுதிக்கு அருகிலுள்ள அரசு விதைப் பண்ணையில் தங்களுக்குத் தேவையான அளவிற்கு விதைகளை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதியில் சுமார் 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் உள்ளனர். நெல், மணிலா, உளுந்து, மரவள்ளிக் கிழங்கு போன்ற பயிர்கள் இங்கு அதிகளவில்

2020 செப்டம்பர் 16]

உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்கு உற்பத்தியாகும் வேளாண் பொருட்களைப் பாதுகாக்கவும், விதை சுத்திகரிப்பு செய்யவும், நவீன வேளாண் விதைப் பண்ணை மற்றும் விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும் தாங்கள் மறுபரிசீலனை செய்து, வழங்க வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், மேல்மலையனூர் ஒன்றியம், செஞ்சி, செம்மேடு பகுதிகளிலுள்ள சுமார் 800–க்கும் மேற்பட்ட கரும்பு விவசாயிகள், ராஜஸ்ரீ சர்க்கரை ஆலையில் பதிவு செய்து, காப்பீட்டுத் தொகையும் செலுத்தி, 2017–2018 ஆம் ஆண்டு ஏற்பட்ட வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளர்கள். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இன்றுவரை நஷ்டஈட்டுத் தொகையை வழங்காததால் மேற்படி விவசாயிகள் தொடர்ந்து போராடி வருகின்றார்கள். எனவே, வறட்சியால் பாதிக்கப்பட்ட அந்தக் கரும்பு விவசாயிகளுக்கு உரிய நிவாரணத் தொகை வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் மொத்தம் 9 விதை சுத்திகரிப்பு நிலையங்களும், விதைப் பண்ணையும் இருக்கின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தப் பகுதியில், நவீன வேளாண் பண்ணை மற்றும் விதை சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்குத் தேவையான இடத்தைத் தேர்வு செய்து, ஆவன செய்வதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வறட்சியால் எந்தளவிற்கு கரும்பு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் மலர் 'செங்காந்தள் மலர்'. கிராமத்திலே அது கண்வலிக் கிழங்கு என்று அழைக்கப்படுவதுண்டு. அதன்*

Botanical name–Gloriosa superba ஆகும். தமிழகத்திலே திண்டுக்கல், தேனி, மதுரை, திருப்பூர், கரூர், நாமக்கல், சேலம், திருச்சி, பெரம்பலூர், அரியலூர், நாகப்பட்டினம் ஆகிய 11 மாவட்டங்களில் சுமார் 5,000 எக்டர் நிலங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்தப் பயிரிலிருந்து உற்பத்திச் செய்யப்படுகின்ற விதைகளை பல வட நாட்டு நிறுவனங்கள் கொள்முதல் செய்கின்றன. ஆனால், தமிழ்நாட்டிலே இருக்கின்ற இடைத்தரகர்கள் அவற்றை கொள்முதல் செய்வதால், விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலை கிடைப்பதில்லை. இவற்றின் விதைகள் ஜப்பான், பிரான்ஸ், இத்தாலி போன்ற மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆண்டுதோறும் விவசாயிகளுக்கு விலை மாறி, மாறி வருகிறது. இதனால், அவர்கள் மிகவும் பாதிப்படைகிறார்கள். உதாரணத்திற்கு, சென்ற ஆண்டிற்கு முன்பு ஒரு கிலோ விதை ரூ.3,250/–, சென்ற ஆண்டு ரூ.2,200/–, இந்த ஆண்டு ரூ.1,000/–. விவசாயிகள் இதில் அதிக முதலீடு செய்து வருமானத்தை நம்பியிருக்கிறார்கள். எனவே, அரசாங்கமே அந்த விதைகளையெல்லாம் கொள்முதல் செய்து, வட நாட்டு நிறுவனங்களோடு பேசி, விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை, fixed price–ஐ நிர்ணயம் செய்தால் விவசாயிகள் மிகவும் பயனடைவார்கள். அதிலே இடைத்தரகர்கள் அதிகமாகப் பயனடைகிறார்கள். எனவே, அரசு அதிலே தலையிட்டு வட நாட்டு நிறுவனங்களோடு கலந்து பேசி, அரசே அந்த விதைகளை கொள்முதல் செய்து அந்த நிறுவனங்களுக்கு விற்பனை செய்தால் விவசாயிகள் மிகவும் பயனடைவார்கள். அதுமட்டுமல்லாமல், கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பாக விவசாயிகளுக்கு ஒரு எக்டருக்கு ரூ.1,00,000/– மானியமாக வழங்கப்பட்டது. கடந்த மூன்றாண்டுகளாக அந்த மானியம் நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே, அந்த மானியத்தையும் வழங்க வேண்டும்; விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலை கிடைப்பதற்கு அரசே அவற்றை கொள்முதல் செய்து, விலை நிர்ணயம் செய்து, அந்த நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘செங்காந்தள் மலர்’ என்பது மருத்துவ குணம் கொண்ட ஒரு பயிராகும். இதனை கண்வலிக் கிழங்கு என்று

2020 செப்டம்பர் 16]

கிராமப்புறங்களில் அழைப்பார்கள். திருப்பூர், திண்டுக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், நாகப்பட்டினம் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் கண்வலிக் கிழங்கு சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. இதுவரை விவசாயிகள் தனியாரிடமிருந்து விதை கிழங்கை கொள்முதல் செய்து, சாகுபடி செய்த கண்வலிக் கிழங்கு விதைகளை தனியாருக்குத்தான் விற்பனை செய்து வருகிறார்கள். தமிழ்நாட்டில் கண்வலிக் கிழங்கு 3,688 எக்டர் நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டு, சுமார் 2,665 மெட்ரிக் டன் விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்விதைகள் பல்வேறு வகையான மருந்துகளைத் தயாரிக்க மட்டுமே பயன்படுகின்றன. அதனால், தனியார் மருந்து நிறுவனங்கள் மட்டுமே விதை கொள்முதலில் ஈடுபட்டு வருகின்றன. இதனால், கண்வலிக் கிழங்கு விதைகளை அரசே நேரடியாகக் கொள்முதல் செய்வதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, தமிழ்நாடு அரசு ஒப்பந்தப் பண்ணைச் சட்டம், 2019-ன்படி, தொடர்புடைய தனியார் நிறுவனங்கள் முன்வரும்பட்சத்தில், அவர்களுடன் ஒப்பந்தம் செய்து முன்பு ஒப்புக்கொள்ளப்பட்ட விலையில் கண்வலிக் கிழங்கு விதைகளை விற்பனை செய்ய வழிவகை செய்யப்படும். மேலும், அந்தந்தப் பகுதிகளிலுள்ள கூட்டுப் பண்ணைய உர உற்பத்தியாளர் நிறுவனங்கள் கண்வலிக் கிழங்கு விதைகளை கொள்முதல் செய்து, சந்தைப்படுத்திட ஊக்குவிக்கப்படும். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணை பெற்று, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை கட்டுப்பாட்டிலுள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் கண்வலிக் கிழங்கு சாகுபடிக்குத் தேவையான விதைக் கிழங்குகளை உற்பத்தி செய்து, மானியத் திட்டங்கள்மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய வழிவகை செய்யப்படும். மேலும், தற்போது தேசிய ஆயுஷ் இயக்கத்தில் மருத்துவப் பயிர்கள் சாகுபடித் திட்டத்தில் தோட்டக்கலைத் துறையின்மூலம் விவசாயிகளுக்கு 1,09,000 ரூபாய் மானியம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எவ்வளவு ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது என்ற விவரத்தை உங்களுக்கு வேண்டுமென்றால் நான் இன்றே தருகிறேன். சென்ற ஆண்டிற்கு முந்தைய ஆண்டைவிட உற்பத்தி அதிகமாக பெருகியதால், விலை குறைந்து காணப்பட்டது. ஆகவே, அந்த உற்பத்தி நிறுவனங்களோடு, எங்கள் உர உற்பத்தி நிறுவனங்கள் கலந்து பேசி, அந்த விதைகளைக் கொள்முதல் செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணை பெற்று தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

18—

கிராம நிருவாக அலுவலகக் கட்டடம்

***18530—திரு. அ. பிரபு:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், மாடூர் கிராமத்திற்கு கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். அழியாப் புகழ் பெற்றிருக்கின்ற தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களையும் வணங்கி, அவர்களுடைய வழித் தொண்டர்களாக சாதனை சரித்திரம் படைத்திட்ட பாரத ரத்னா புரட்சித் தலைவர் அவர்களையும், தமிழர்குல சாமி புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் தகவல் தொழில்நுட்பத் துறையின்மூலம் 12.78 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் அரசுத் துறைகளின்கீழ் செயல்படும் எல்லா குறைதீர்ப்பு அமைப்புகளையும் ஒருங்கிணைத்து அவற்றிற்கு உடனடித் தீர்வு காண வரலாற்றிலே முதல் முறையாக முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டத்தை விதி 110-ன்கீழ் அறிவித்து, குறைதீர்க்கும் முகாம்களில் வேலைவாய்ப்பு வேண்டுவோருக்கு